# சான்றோர்களின் சீர்திருத்தச் சிந்தனைகள்

**தி. சுமதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
விசுன்பார் விஸ்டம், ஆழியார், துணைப்பேராசிரியர்
அதியமான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஊத்தங்கரை

**முனைவர் ப. சக்தி குமாரவேல்**
நெறியாளள், விசுன்பார் விஸ்டம்
ஆழியார், கோவை

மலர்: 4
இதழ்: 1
மாதம்: ஜூலை
வருடம்: 2019
ISSN: 2454-3993

## முன்னுரை

மனிதகுலம் மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் வாழ்வதற்கு எண்ணற்ற மகான்களும், சிந்தனையாளர்களும், தத்துவ ஞானிகளும் தாம் பெற்ற அனுபவங்களையும் சத்தியங்களையும் உண்மைகளையும் உபதேசித்துள்ளனர். சமுதாயத் தீமைகளை அகற்ற பல்வேறு சீர்திருத்தக் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். அவ்வரிசையில் வள்ளலார், பெரியார், பாரதியார், பாரதிதாசன், வேதாத்திரி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சமுதாயத்தில் மக்கள் அறியாமை, மூடநம்பிக்கை, சாதிப்பற்று, போன்றவற்றைப் பகுத்தறிவால் போராடிக் களைய வேண்டும் என்று சிந்தனை செய்த சீர்திருத்தவாதிகள் இவர்கள். இவர்களின் கல்வி, பெண்மதிப்பு, மூடபழக்கம், குடும்பம் சார்ந்த சீர்திருத்தக் கருத்துகள் இக்கட்டுரையில் ஆராய்ந்துரைக்கப்படுகின்றன.

## சீர்திருத்தம்

சீர்திருத்தம் என்பதற்கு “செவ்வைப் படுத்துகை” என்னும் பொருள், சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ் லெக்சிகனில் கொடுக்கப்பட்டுள்ளது. சீர்திருத்தம் என்பது ஒழுங்குமுறை, இயல்பான தன்மை எனப் பொருள் கொள்ளலாம். தவறுகளைக் களைந்து சீரமைப்படுத்திக் கொள்ளும் முறையே சீர்திருத்தம் எனலாம். சீர்திருத்தங்கள் வழியே சமுதாயம் வளரும் காலத்திற்கு ஏற்ப நல்ல மாற்றம் தேவைப்படுகிறது. இக்காலத்திற்குப் பல்வேறு துறைகளில் சீர்திருத்தம் அவசியம் தேவைப்படுகிறது.

**கல்வி சீர்திருத்தச் சிந்தனைகள்**

கல்வி என்றால் அறிவித்தல், தெரிவித்தல் என்ற பொருள்படும். எதை அறிவிப்பது என்று உற்று நோக்கினால் மனிதன் மனிதத் தன்மையுடன், உலக வாழ்வியல் நெறிப்படி நடந்துகொள்ள வேண்டும். இதனை அறிவிப்பது கல்வியாகும்.

இதற்கு சான்றாக,

**"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறி விலாதார்" (குறள் -140)**

என்ற குறளைக் குறிப்பிடலாம்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமைவது "அனைவருக்கும் கல்வி" என்பதை வள்ளலார் பாடல்களில் காணமுடிகிறது.

**கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்**
**கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப்போகவேண்டும்**
**(வள்ளலார், திருவருட்பா பா-3768)**

என்னும் வரிகளில் கற்பனையாக படைக்கப்பட்டுள்ள, பொய்மையும் வழுவையும் கலந்த கல்வியைக் கண்டிக்கிறார். வாழ்க்கையில் நிலைத்து நிற்கக்கூடிய கல்வியே சிறந்தது. கருணையும் உணர்ச்சிகளையும் அழிக்க கூடிய கல்வி கூடாது. சாகாக் கல்வியே தலை சிறந்த கல்வி என்பதனை,

**"சாகாத கல்விதரம் அறிதல் வேண்டுமென்றும் வேகாத கால் உணர்தல் வேண்டுமுடன்-சாகா குலை அறுதல் வேண்டும் தனி அருளால் உண்மை நிலை அடைதல் வேண்டும் நிலத்து"**

**(வள்ளலர், திருவருட்பாத் திரட்டு பக்கம் 87)**

என்ற பாடலின் மூலம் வலியுறுத்துகிறார்.

பெரியார் சீர்திருத்தச் சிந்தனைகளை எண்ணுவது இக்காலத் தேர்வு முறையாகும். கல்வியானது பகுத்தறிவுத் தரக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அப்படியே செய்திகளை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் தேர்வுமுறை அகற்றப்பட வேண்டும். கல்வியின் உயிர் நாடியாக இருப்பது கல்வி புகட்டும் முறையும், தேர்வுமுறையும், அதனைச் செம்மைப்படுத்த வேண்டும் என்கிறார் பெரியார்.

"தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை அறிவாளிகள் என்று கூறமுடியாது. மனப்பாடக் கலையில் வல்லவர்கள் என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் தேர்வு முடிந்ததும் மாணவர்கள் மனத்திலிருந்து உருப்போட்ட பாடங்கள் உருக்குலைய ஆரம்பிக்கின்றன. சில அறிவுள்ள மாணவர்கள் சூழல் காரணமாகத் தேர்ச்சி பெற முடியாமல் போகின்றனர். சில மாணவர்கள் உழைப்பினாலும் நெட்டுருவினாலும் அதிக மதிப்பெண்ணைப் பெற்று விடுவர். இது முயல் ஆமைப் பந்தயம் போன்றதாகும்"(ஞா.தேவநேயன்-மண்ணில் விண் பக்கம் 93) என்று மனப்பாடக்கல்வியின் தீமைகளை விளக்குகிறார் பெரியார்.

கல்வியால் புதிய வரலாற்றை நம்மால் உருவாக்க முடியும். கல்வியால் அறியாமையைப் போக்குவதுடன் மக்களிடையே ஏற்றத் தாழ்வினை நீக்கி, செம்மையான வாழ்விற்கு வழிவகுக்க முடியும் என்கிறார் பாரதி.

**"வாழி கல்வி செல்வம் எய்தி**
**மனம் மகிழ்ந்து கூடியே**
**மனிதர் யாரும் ஒரு நிகர்**
**சமானமாக வாழ்வமே"**

**(விடுதலை பாடல்கள், ப. 70)**

பாரதி கனவு மெய்பபட வேண்டுமெனில் தெருவெங்கும் ஊரெங்கும், நாடெங்கும் பள்ளிச்சாலைகளை உருவாக்க வேண்டும். அப்பள்ளிச்சாலைகள் மாணவர்களுக்குக் கல்வியும் கலையும் வளர்ப்பதாக அமைய வேண்டும்.

கல்வியானது தனிமனித வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். கற்ற கல்வியின் மூலமே ஒரு நாட்டின் நாகரிகம்,

பண்பாடு, ஒருமைப்பாடு நிலவும் என்பதனை,

**"கல்வியினால் நாகரிக**
**உணர்ச்சியுண்டு.**
**கல்வியினால் பண்பாட்டின் வாழ்வும்**
**கல்வியினால் மனிதமனம்**
**ஒருமை காணும்"**

***(பாரதிதாசன் கவிதைகள் ப.1966)***

என்னும் வரிகளில் பாரதிதாசன் சுட்டிக்காட்டுகிறார். கல்வி நாட்டில் வியத்தகு மாற்றங்களை உண்டு பண்ணக்கூடியது. மனதை ஒரு முகப்படுத்து வதாகக் கல்வி அமையும் போது தான் அது சிறந்த கல்வியாக அமையும். "செயற்கை முறையில் எதிர்த்தும் ஒத்தும் வாழ சிந்தனையை, செய்திறனை, பண்படுத்தும் பயிற்சி உடலுக்கும் அறிவிற்கும் ஊட்டும் பயனுள்ள கல்வி முறை வகுக்க வேண்டும்" (ஞானக்களஞ்சியம்) என வேதாத்திரி பயனுள்ள கல்வி முறையை அமைக்க விழைந்துள்ளார்.

## பெண்மதிப்பு சீர்திருத்தச் சிந்தனைகள்

இல்லறத்தை நல்லறமாய் மாற்ற பெண்களுக்கு கல்வியும் நற்குணங்களும் பெற்று ஆசையற்றவராய் இருக்க வேண்டும் என்பது வள்ளலாரின் விருப்பமாகும்.

**"வான்பெறு பொருளும் வாழ்வும் நற்றுணையும்**
**மக்களும் மனைவியும் உறவும்**
**நான்பெறு நண்பும் யாவும் நீ என்றே**
**நம்பினேன் கைவிடேல் எனையே"**

***(திருவருட்பா பா.எ.3558)***

மனைவியையும் மக்களையும் கடவுள் வடிவாகவே காணவேண்டும். உயர்வு தாழ்வின்றி பெண்களை மதித்து வாழ வேண்டும் என்பது வள்ளலார் கருத்தாகும். கற்பு என்பது ஒழுக்கத்தைச் சார்ந்ததாகும் ஆண், பெண் இருபாலருமே கடைப்பிடித்தல் அவசியமாகும் என்பதனை,

"கற்பு என்பதைச் சுகாதாரத்தையும் சரிரத்தையும் பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன் என்றாலும், இன்று அந்த முறையில் கற்பு கையாளப்படுவதில்லை" (பெரியார் ஈ.வே.ரா சிந்தனைகள் தொகுதி 2) எனக் கேட்கிறார் பெரியார். கற்பு என்பது ஒழுக்கம் மற்றும் சுகாதாரத்தை சார்ந்ததாகவும் அது சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறார்.

விடுதலைக்காகப் பாடிய பாரதி, ஒரு நாட்டின் மேம்பாடு என்பது பெண்களின் மேம்பாட்டிலேயே இருக்கிறது என்பதை,

**"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்**
**றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்**
**வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற**
**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"**

***(விடுதலைகும்மி ப.731)***

என்ற வரிகளில் பெண் விடுதலை கும்பிப் பாடலில் பெண்களின் பெருமைகளை பாரதியார் நினைவு கூர்கின்றார்.

பெண்களுக்கு கல்வி சிறந்த அணிகலன்களாக திகழ்வதை

**"கற்பது பெண்களுக்கு காரணம் – கெம்புக்**
**கல் வைத்த நகை தீராத ரணம்"**

***(பாரதிதாசன் கவிதைகள் ப.619)***

குறிப்பிடுகிறார்பாரதிதாசன். பெண்களுக்கு வளர்ச்சியெல்லாம் கல்வியால்தான் வரும். கல்வி மட்டுமே சிறந்த அணிகலன்களாக இருக்க முடியும் என தெளிவுப் படுத்துகிறார்.

## மூடப்பழக்கவழக்கம்

சமுதாயம் மேம்பட வேண்டுமானால் மக்களிடையே காணப்படும் மூட நம்பிக்கையை ஒழிக்க வேண்டும் என்பதனை,

**"கலைஉரைத்த கற்பனையேநிலைஎனக் கொண்டாடும்**
**கண் மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப்போகசு**

***(திருவருட்பா பா.3768)***

என்று தனது ஆத்ம ஞான பாடல்கள் மூலம் வள்ளலார் வழிகாட்டுகிறார்.

**வள்ளலாரின் முக்கிய சீர்திருத்தங்கள்**

1. அணிகலன்கள் அணிந்து கொள்ளாமை
2. இறைவன் ஒருவரே
3. கணவனை இழந்த பெண்களிடம் தாலி வாங்கக் கூடாது.
4. இறந்தோரை எரிக்ககூடாது.
5. ஆண்களுக்குச் சமமாகப் பெண்களை மதித்தல்
6. உயிர்கொலை கூடாது.

மேற்கூறிய வள்ளலாரின் அனைத்தும் கருத்துகளும் சிந்திக்கதக்கனவாகும். நமது மக்கள் பெரும்பாலும் எந்தவொரு விழாக்களிலும் சடங்கு, சகுனம் பார்த்து எந்தச் செயலில் ஈடுபடும்போது நன்மையுண்டாகும் என்று எண்ணுவதை,

**"பொருத்தம் பார்த்து சகுணம் பார்ப்பது**
**என்பது மிகமிக முட்டாள்த்தனம்"**
**(நன்னை.மா.பெரியார் கணினி தொகுதி-2 ப. 554)**

என்னும் வரிகளில் பெரியார் தெறிவுப்படுத்துகிறார். பெரும்பாலான விழாக்கள் நம்மை மூடத்தனத்தில் ஆழ்த்து கின்றன என்று கூறுகிறார் பெரியார்.

இன்றும் மக்கள் சாதி சமய நம்பிக்கையில் ஊறிப்போய் இருக்கிறார்கள் என வருந்துகிறார் பாரதிதாசன்.

**"சாதி மத பேதங்கள் மூடவழக்கங்கள்**
**தாங்கி நடைபெற்று வரும்**
**சண்டையுலகிதனை ஊதையினில்**
**துரும்புப் போல் அலைக் கழிப்போம்**
**பின்னர் ஒழித்திடுவோம், புதியதோர்**
**உலகம் செய்வோம்" (முரசு ப.285)**

என்னும் வரிகளில் சாதி மத பேதங்களால், மூடப் பழக்கவழக்கங்களால் உலகில் சண்டைகள் மலிந்து கிடக்கின்றன. இவ்வகையான உலகை ஒழித்துப் புதிய உலகை படைப்போம் என்கிறார் பாவேந்தர்.

சாதி சமய மத ஏற்றத்தாழ்வுகளையும் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடும் இல்லாத பாரத சமுதாயத்தைக் காண விழைந்தார் பாரதி.

**"ஏழை என்றும் அடிமை என்றும் எவனும்**
**இல்லை ஜாதியில், இழிவு கொண்ட**
**மனிதரென்பது இந்தியாவில் இல்லையே"**
**(விடுதலை பாடல்கள் ப.69)**

என்றும்

**"மனிதர் யாரும் ஒரு நிகர்சமமாக**
**வாழ்வமே"**

என்று பாடுகிறார் பாரதி உயர்ந்த சாதிப்பிரிவினர் என்று கருவோரிடமிருந்து தாழ்ந்தசாதி என்று கருதுவோரும் விடுதலைப் பெறவேண்டும் என்கிறார் பாரதி.

**குடும்பச் சீர்திருத்தச் சிந்தனை**

குடும்பம் என்பதற்கு குழுமியிருத்தல் என்ற பொருள்படும். குடும்பத்தை ஒரு நிலையமாக சொல்லாம். கூடி வாழும் ஒரு சமூக அமைப்பு குடும்பமாகும். வள்ளலார் திரு அருட்பா ஆறாவது திருமுறையில் "குடும்பகோரம்" என்னும் தலைப்பில் குடும்ப வாழ்க்கையைப் பற்றி கூறியிருப்பது உற்று நோக்கத்தக்கது.

**"எழுதவென் றாலும் ஏட்டுக் கடங்கா**
**என்னினும் சிறிதே எழுதத் துணிந்தனன்"**
**(திருஅருட்பா-6ம் திருமுறை -ப.488)**

என்று வள்ளலார் அளித்துள்ள விளக்கம் சிறப்பிற்குரியது.

**"முதல் மனைவி ஆணவம்-பிள்ளை அஞ்ஞானம்**
**இரண்டாவது மனைவி மாயை**
**-முதல் பிள்ளை-மனம்**
**- 2வது பிள்ளை-புத்தி**
**- 3வது பிள்ளை -சித்தம்**
**- 4வது பிள்ளை -அகங்காரம்**
**மூன்றாவது மனைவி காமியம்-குடிக்கூலி, வீடு, தேகம் முக்குணங்கள்-வாத, பித்த, சிலேத்துமம்**
**வீட்டின் தலைவன்-தேகம்**
**(திருவருட்பா பக்கம் -489-498)**

உடல், உயிர், மனம் இவற்றால் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களையும், குடும்பத்தில் வாழ்பவர்களின் செய்கை களையும் கூறியிருக்கிறார்.

குடும்பம் செம்மையாக நடப்பவதற்கு ஆண்கள் பொருளீட்டவும், வீட்டுக் கடமைகளைக் சரியாகச் செய்யவும் இல்லறத்தை நல்லறமாக செய்யும் வலிமை பெண்களுக்கே உண்டு என்பதனை,

**"ஒன்றைக் குடும்பந் தனிலே-பொருள்**
**ஓங்க வளர்ப்பவன் தந்தை**
**மற்றைக் கருமங்கள் செய்தே-மனை**
**வாழ்ந்திடச் செய்பவள் அன்னை"**

**(பாரதியார் கவிதைகள் முரசு பா.5(1-4))**

என்னும் கவிதை வரிகள் மூலமாகப் பாரதியார் எடுத்தியம்பிபுள்ளார். பல வகையில் ஆண்கள் பெண்கள்விட மேம்பாடு உடையவர்களாக இருந்தாலும் அறிவிலும், தெளிவாக முடிவெடுக்கும் திறனிலும் அறிவுக் கூர்மையிலும் ஆண்களை விட பெண்களே மேலானவர்களாக இருக்கிறார்கள் என்பது பாரதியின் கருத்தாகும்.

விவாகரத்துச் சட்டமானது பெண்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற இன்றியமைந்த பாதுகாப்புக் கருவியாகும். தனக்குப் பிடிக்காத கணவனுடன் தாலி கட்டிய காரணத்திற்காக வாழ்வது, அவனது கொடுமைகளையும் சகித்துக்கொண்டு வாழத் தேவையில்லை என்பதனை,

**"ஏதோ கல்யாணம் என்பதாக ஒன்றைச் செய்து கொண்டோமே அது எப்படி இருந்தாலும் சகித்துக் கொண்டு தானே இருக்க வேண்டும் என்று கருதி வாழ்வதும் வாழச் செய்வதும், மனிததன்மையும் சுய மரியாதையுமற்ற காரியமாகும்"**

**(ந.வேலுச்சாமி, சமூக விஞ்ஞானி பெரியார், ப.35)**

என்னும் வரிகளில் பெரியார் எடுத்துரைக்கிறார்.

திருமண வாழ்க்கையானது பெண்களுக்குப் பல வழிமுறைகளில் பாதகமாகவே அமைகிறது என்கிறார் பெரியார்.

பெரியார் உருவாக்கிய திருமணமுறை பாவேந்தரைக் கவர்ந்தது. அவர் அதை எங்கும் பரம்ப வேண்டுமென்று விரும்பினார். அவர் அதைப்பற்றி தமது கவிதைகளில் விளக்கியுள்ளார். குடும்ப விளக்கில் பாவேந்தர் இந்திருமண முறையை அமைத்துள்ளார். இத்திருமணத்தில் தாலி கட்டுதல் இல்லை. தாலி சின்னம் அடிமையாகக் கருதப்பட்டதால் அதை நீக்கினார்.

வைதிக சடங்கு முறைகள் திருமணத்தில் கிடையாது குடும்பவிளக்கில் மாலை மாற்றும் சடங்கு மட்டுமே இடம் பெற்றுள்ளது. மோதிரம் அணிதல் கிடையாது. பதிவு அலுவலகத்தில் திருமணம் பதிவு செய்தலும் கிடையாது. குடும்ப விளக்கின் மூலமாக பாவேந்தர் புரட்சிகரமான திருமணத்திற்கு வித்திட்டுள்ளார்.

## முடிவுரை

மக்கள் அனைவரும் மனிதநேயத்துடன் இச்சமூகத்தில் வாழவேண்டும். அனைவரும் கல்வி கற்று உயர்வடைய வேண்டும். சாதி, சமய, மதம் தவிர்த்து ஒற்றுமையுடன் வாழவேண்டும். பெண் கல்வி பெண்ணினத்தைப் போற்றி உயர்வடையச் செய்த வேண்டும். மூடநம்பிக்கைல் சாதிப்பற்று, பகுத்தறிவின்மை, மூடபழக்க வழக்கம் போன்றவற்றைப் பகுத்தறிவால் போராடிக்களைய வேண்டும் என்ற சீர்திருத்தவாதிகளின் கருத்துகள் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## துணைநூற்பட்டியல்

1. வள்ளலார், திருவருட்பா
2. ஆனைமுத்து, ஈ.வெ.ரா சிந்தனைகள்
3. பாரதியார், பாரதியார் கவிதைகள்
4. பாரதிதாசன், குடும்ப விளக்கு
5. வேதாத்திரி, ஞானம்களஞ்சியம்
6. ந.வேலுச்சாமி, சமூகவிஞ்ஞானி பெரியார்
7. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்
8. மா.நன்னன், பெரியார் கணினி தொகுதி-2